29.01.2026

C.C. No. 94/2023

எ.ம.சா. 1. முத்தரசி, க/பெ. ( லேட்) மனோகரன், குருந்தம்பட்டி
( சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை</u>

1) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ–1 ஆவணம் என்னுடையது அதில் உள்ள கையொப்பமும் என்னுடையது. நான் புகார்தாரருக்கு எந்தெந்த தேதிகளில் பணத்தை திருப்பி செலுத்தினேன் என்றால் தேதியை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் எப்போது புகார்தாரர் மீது காவல் துறையில் புகார் அளித்தேன் என்றால் நான் புகார் அளிக்கவில்லை. அவரால் பாதிக்கப்பட்ட மற்றொரு நபர்தான் புகார்அளித்தார். இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கை தவிர வேறொரு காசோலை மோசடி வழக்கு என் மீது நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. அந்த வழக்கின் புகார்தாரர் பெயர் அன்பு குமாரி. மேற்படி அன்பு குமாரி நான் ரூ. 3 லட்சத்து 50 ஆயிரம் மோசடி செய்ததாக மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். எ.ம.சா.ஆ1, 2 என்னால் பூர்த்தி செய்யப்படவில்லை வங்கியில் பணிபுரியும் நபர் மூலம் பூர்த்தி செய்து வைப்பீடு செய்யப்பட்டது. அதில் உள்ள வங்கி கணக்கு எண்ணில் வித்தியாசம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) எ.ம.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்களை தவிர வேறு ஏதேனும் ரசீதுகள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. புகார்தாரருக்கு கடைசியாக எந்த தேதியில் எவ்வளவு பணம் வங்கி மூலம் செலுத்தினேன் என்றால் 19.10.2022 ம் தேதியன்று ரூ.1 லட்சம் செலுத்தினேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் உண்மைக்கு மாறானவை என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு ரூ.1 லட்சத்து 30 ஆயிரம் கொடுக்க சட்டப்படி கடமைபட்டவள் என்றால் சரியல்ல. காசோலை கொடுத்து மோசடி செய்வது எனக்கு வாடிக்கை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் புகார்தாரர் எந்த தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு அனுமதிக்கதக்கது என்றாலும், நான் தண்டிக்கப்படவேண்டியவர் என்றாலும் சரியல்ல. புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான்

**பெற்றுக்கொள்ளவில்லை. அப்போது நான் அந்த முகவரியில் இல்லை. ஆனால் அந்த முகவரி என்னுடையதுதான்.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.29 17:10:56 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி (மு.கூ,பொ)